1. கணக்காய்வு அபிப்பிராயம்

1.1 யாழ்ப்பாணம் மாவட்டத்தின் பதினைந்து கமநல சேவைகள் நிறைவேற்றுக் குழுக்களின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம், 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் 58(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளிற்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

1.2 2024 ஆம் ஆண்டிற்கான யாழ்ப்பாண மாவட்டத்தின் 15 கமநல சேவைகள் நிறைவேற்றுக் குழுக்கள் தொடர்பான கணக்காய்வு அறிக்கைகள் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன், அந்த 15 கமநல சேவைகள் நிறைவேற்றுக் குழுக்களுக்கும் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்தப்பட்டதுடன், அதற்கு காரணமாக இருந்த பொருண்மையான வழுக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

1.3 நிதிக்கூற்றுக்கள்

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	மீளாய்வாண்டில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருக்காத கூட்டுமொத்தம் 16,276.70 கிலோக்கிராம் மானிய உர இருப்பானது 03 நிறைவேற்றுக்குழுக்களின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.	மானிய உர இருப்புகளை நிதிக்கூற்றுக்களில் இருப்பாக காட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலையத்திலுள்ள இருப்புக்களின் பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் காட்ட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். மற்றும் பொருத்தமான சீராக்கங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	2020 ஆம் ஆண்டு முதல் 04 கமநல சேவைகள் நிறைவேற்றுக்குழுக்களின் சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்படாத ரூபா 24,034,339 ஆன நிலையான சொத்துக்கள் கணக்கில் காட்டப்படாமையினால் நிதிக்கூற்றுக்களில் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 24,034,339 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.	இனிவருங்காலங்களில் நிலையான சொத்துக்களின் பதிவேட்டில் உள்வாங்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டள்ளது.	நிலையான சொத்துக்களின் சரியான பெறுமதி கணக்களில் காட்டப்படல் வேண்டும் மற்றும் பொருத்தமான சீராக்கங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	05 கமநல சேவைகள் நிறைவேற்றுக்குழுக்களின் மீளாய்வாண்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த நன்கொடைகளின்	திரண்ட நிதியுடன் சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	சரியான மீதியை நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

	கூட்டுமொத்தம் ரூபா 27,862,228 தொகை திரண்ட நிதியுடன் சேர்க்கப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.		
(ஈ)	02 கமநல சேவைகள் நிறைவேற்றுக்குழுக்களின் சேவை நிலையத்தில் கட்டடங்கள் அமைக்கப்பட்டு இயங்கிவருகின்ற போதும் அக்காணியின் பெறுமதி மதிப்பிடப்பட்டிருக்காததுடன் நிதிநிலைமைக்கூற்றில் சொத்தாக காட்டப்பட்டிருக்காமையினால் சொத்தின் பெறுமதி குறைத்து காட்டபட்டிருந்தது.	சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	சொத்தின் சரியான பெறுமதி கணக்களில் காட்டப்படல் வேண்டும் மற்றும் பொருத்தமான சீராக்கங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(உ)	05 கமநல சேவைகள் நிறைவேற்றுக்குழுக்களினால் மீளாய்வாண்டில் நிலையான சொத்துக்கள் கூட்டுமொத்தம் ரூபா 1,159,538 இற்கு ஏலவிற்பனை மூலம் பதிவழிப்பு செய்யப்பட்டபோதிலும் நிலையான சொத்துப்பதிவேட்டில் அவற்றின் கிரயம் முழுமையாக அகற்றப்பட்டிருக்காததுடன் ஏலவிற்பனை மூலம் பெறப்பட்ட பணம் ரூபா 1,159,538 நிதிச் செயலாற்றுகைக்கூற்றில் வருமானமாக காட்டப்பட்டதனால் நிலையத்தின் இலாபத்தினை சான்றுபடுத்த முடியாதிருந்தது.	எதிர்காலத்தில் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலையான சொத்துக்களின் முடிவுறுத்தல் லாபம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். மேலும் பொருத்தமான சீராக்கங்கள் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
(ஊ)	04 கமநல சேவைகள் நிறைவேற்றுக்குழுக்களின் நிலையான வைப்பு வட்டி வருமானம் அட்டுறு அடிப்படையில் கணிப்பிப்படாது காசு அடிப்படையில் கணிப்பிடப்பட்டிருந்தன.	எதிர்காலத்தில் அட்டுறு அடிப்படையில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் அட்டுறு அடிப்படையில் தயாரிக்கப்பட வேண்டும். மேலும் பொருத்தமான சீராக்கங்கள் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
(எ)	தொல்புரம் கமநல சேவை நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்பட்ட கொள்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களானவை அட்டுறு அடிப்படையில் தயாரிக்கப்படுவதாக வெளிப்படுத்தப்பட்ட போதிலும் ஏக்கர் வரி காசு அடிப்படையில் கணிப்பிடப்பட்டு நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.	எதிர்காலத்தில் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்ட கொள்கைகளின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் அட்டுறு அடிப்படையில் தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஏ)	சண்டிலிப்பாய் கமநல சேவைகள் நிலையத்தின் இருப்புப் புத்தகப் பதிவின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் 25Kg நிறையுடைய 2,275 MOP	இவை இலவசமாக பெறப்பட்டமையால் பணப்பெறுமதியினை உறுதிப்படுத்த	பெறுமதி கணிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

	பொதிகள் உரமானது காணப்பட்ட போதிலும் அவை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	முடியவில்லை.	
(ஐ)	கரவெட்டி கமநல வேவைகள் நிலையத்தினால் மீளாய்வாண்டு காலப்பகுதியில் நன்கொடையாக கிடைக்கப்பெற்ற ரூபா 1,920,906 பெறுமதியான இலத்திரனியல் உபகரணங்கள் நிதிச்செயலாற்றுகைக்கூற்றில் வருமானமாக இனம் காணப்பட்டிருக்கவில்லை.	கணக்காய்வு முகாமைத்துவ குழு கூட்டத்தில் கலந்துரையாடி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	நன்கொடை மூலம் பெறப்பட்ட சொத்தானது சரியான முறையில் நிதிக்குற்றுக்களில் சீராக்கப்படல் வேண்டும்.

1.3.2 கணக்காய்விற்கான எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

பின்வரும் அவதானிப்புக்கள் அவதானிக்கப்பட்டன.

	விடயம்	தொகை ரூபா	வழங்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	07 கமநல சேவைகள் நிறைவேற்றுக்குழுக்களின் மீளாய்வாண்டுக்கான எரிபொருள் செலவு, சாரதி தரகுப்பணம் மற்றும் திருத்தச்செலவு.	2,175,876	நாளாந்த வாகன ஓட்டப் பதிவேடு, வாகன சம்பவத்திரட்டு புத்தகம், எரிபொருள் நுகர்வு பதிவேடு, வாகனத் திருத்த பதிவேடு.	குறித்த பதிவேடுகள் உரிய முறையில் பேணப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.	ஆவணங்கள் இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுவதுடன் இவற்றை செய்யத்தவறிய தரப்பினா் மீது நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஆ)	14 கமநல சேவைகள் நிறைவேற்றுக்குழுக்களின் மீளாய்வாண்டுக்கான ஏக்கர் வரி.	1,651,617	வயற்காணி பதிவேடுகள்.	இனிவரும் காலத்தில் இப் பதிவேடானது இற்றைபடுத்தப்பட்டு கணக்காய்விற்கு சமர்பிக்கப்படும்.	வயற்காணிப் பதிவேடுகள் உரிய முறையில் பேணப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். இவற்றை செய்யத்தவறிய தரப்பினா் மீது நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(இ)	09 கமநல சேவைகள் நிறைவேற்றுக்குழுக்களின் நிதி நிலமைக்கூற்றில் காட்டப்பட்டிருந்த 53 வருமதிகள்.	4,941,459	வருமதிகளுக்கான எழுத்து மூலமான உறுதிப்படுத்தல்கள் மற்றும் கடன்பட்டோர் பட்டியல் மீதி.	வருமதி தொடர்பான எழுத்து மூலமான உறுப்படுத்தல் கடிதங்களை பெற்றுக்கொள்	நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட மீதிகளின மேல் எழுத்து மூலமான உறுதிப்படுத்தல்கள் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

				ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது.	
(ஈ)	14 கமநல சேவைகள் நிறைவேற்றுக்குழுக்க ளின் நிதி நிலமைக்கூற்றில் காட்டப்பட்டிருந்த சென்மதிகள்.	3,524,250	விரிவான பட்டியல்	சென்மதிகளுக்க ான எழுத்து மூலமான உறுதிப்படுத்தல் களை பெற்றுக்கொள் ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது.	நிதிக்கூற்றுடன் விபரமான அட்டவணை சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
(உ)	02 கமநல சேவைகள் நிறைவேற்றுக்குழுக்க ளின் நிதி நிலைமைக்கூற்றில காட்டப்பட்ட நடைமுறையல்லாச் சொத்துக்கள்	977,513	குறித்த சொத்துக்கள் பௌதீக ரீதியாக காணப்படவில்லை.	இவை பல வருடங்களுக்கு முன் களவாடப்பட்டவை. இவற்றை பதிவழிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது	நிதி ஒழுங்கு விதி 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். மற்றும் இதை செய்யத்தவறிய தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஊ)	05 கமநல சேவைகள் நிறைவேற்றுக்குழுக்க ளின் நிதி நிலைமைக்கூற்றில் காட்டப்பட்டிருந்த பெறுமதியான சரக்கிருப்பு, சேதனப்பசளை மற்றும் நடைமுறைச்சொத்துக் கள்	1,730,913	- மேற்படி -	- மேற்படி -	- மேற்படி -
(எ)	புலோலி கமநல சேவைகள் நிலையத்தின் மீளாய்வாண்டின் நிதி நிலைமைக்கூற்றில் நிலையான சொத்தின் பெறுமதி.	590,967	நிரந்தரச்சொத்துப் பதிவேடு.	நிரந்தரச் சொத்துப் பதிவேடு தயாரித்துப்பேணப் படும்	நிரந்தர சொத்து பதிவேடு தயாரித்து கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேலும் பதிவேட்டினை முறையாக பேணாத தரப்பினர் மீது நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

1.4 இணக்கமின்மைகள்

1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு	இணக்கமின்மைகள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	**2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டம்**			
	(i) பிரிவு 53	15 கமநல சேவைகள் நிறைவேற்று குழுக்களினால் கமத்தொழிற் காணிகளின் பதிவேடுகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	கமத்தொழில் காணிப்பதிவேட்டுக்கான வேலைத்திட்டங்கள் நிறைவடைந்ததும் இப்பதிவேடானது பேணப்படும்.	கமநல அபிவிருத்தி சட்டத்தின் விதிகளின் படி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
	(ii) பிரிவு 55	13 கமநல சேவைகள் நிறைவேற்று குழுக்களின் நிர்வாகப் பிரதேசத்திலுள்ள கமத்தொழிற் காணிகளை நில அளவை செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	வயற்காணிகள் தற்போது google map இன் உதவியுடன் அளவீடு செய்யப்பட்டு வயற்காணிகள் அளவுகள் பெறப்பட்டுள்ளன.	- மேற்படி -
	(iii) பிரிவு 56(i)	13 கமநல சேவை நிறைவேற்று குழுக்களின் ஏக்கர்வரிப் பதிவேடானது நாளது வரை பேணப்பட்டிருக்கவில்லை.	ஏக்கர் வரிப்பதிவேடானது இனிவரும் காலங்களில் முறையாகப் பேணப்படும்.	-மேற்படி -

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகள்

(i) நிதி ஒழுங்கு விதி 110(1)(2)	12 கமநல சேவைகள் நிறைவேற்று குழுக்களினால் இழப்புக்கள் மற்றும் நட்டங்கள் தொடர்பான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.	இழப்புக்கள் மற்றும் நட்டங்கள் தொடர்பான பதிவேடுகள் உரிய முறையில் இற்றைப்படுத்தி பேணுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	அரசாங்க நிதி ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். மேலும் இவற்றை மேற்கொள்ளாத தரப்பின் மீது நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ii) நிதி ஒழுங்கு விதி 214	12 கமநல சேவைகள் நிறைவேற்று குழுக்களினால் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.	பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடுகள் பேணப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	-மேற்படி -
(iii) நிதி ஒழுங்கு விதி 341	02 கமநல சேவைகள் நிறைவேற்று குழுக்களினால் அடியிதழ்சேர் புத்தகப்பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.	அடியிதழ் சேர் புத்தகப்பதிவேடுகள் உரிய முறையில்பேணப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	-மேற்படி -
(iv) நிதி ஒழுங்கு விதி 502(2)	06 கமநல சேவைகள் நிறைவேற்று குழுக்களினால் நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.	நிலையான சொத்து பதிவேடு பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	-மேற்படி -

(v) நிதி ஒழுங்கு விதி 880, 881	08 கமநல சேவை நிறைவேற்று குழுக்களின் 20 உத்தியோகத்தர்களினால் பிணைப்பணம் வைப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.	பிணைப்பணம் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	-மேற்படி -
(vi) நிதி ஒழுங்கு விதி 891(1)	08 கமநல சேவை நிறைவேற்று குழுக்களினால் பிணைப்பணப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.	பிணைப்பணப் பதிவேட்டை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	-மேற்படி -
(vii) நிதி ஒழுங்கு விதி 1645(அ)	10 கமநல சேவை நிறைவேற்று குழுக்களினால் 80 எண்ணிக்கையான உழவு இயந்திரங்களுக்கான வாகன சம்பவக்குறிப்பு புத்தகமொன்று பேணப்பட்டிருக்கவில்லை.	வாகன சம்பவக் குறிப்பு புத்தகமொன்றை பேணப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	-மேற்படி -
(viii) நிதி ஒழுங்கு விதி 1646	12 கமநல சேவைகள் நிறைவேற்று குழுக்களினால் 89 எண்ணிக்கையான உழவு இயந்திரங்களுக்கான நாளாந்த வாகன ஓட்டப் பதிவேட்டு மூலப்பிரதி மற்றும் அதன் மாதாந்த செயலாற்றுகைப் பொழிப்புக்கள் நாளதுவரை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	நாளாந்த ஓட்டப் பதிவேட்டின் மூலப்பிரதி மற்றும் அதன் மாதாந்த செயலாற்றுகைப் பொழிப்புக்கள் என்பன கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	-மேற்படி -
(இ) அரச நிர்வாக சுற்றறிக்கைகள்			
29 திசெம்பர் 2016 ஆந் திகதிய சுற்றறிக்கை இலக்கம் 30/2016	08 கமநல சேவைகள் நிறைவேற்று குழுக்களின் வாகனங்களிற்கு எரிபொருள் நுகர்வுப் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	வாகனங்களுக்கு எரிபொருள் நுகர்வு தொடர்பான பரீட்சிப்பு மேற்கொள்ளுவதற்கு ஆவண செய்யப்படும்.	சுற்றுநிருபத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதிப் பெறுபேறு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான பதினைந்து நிறைவேற்றுக்குழுக்களின் மீண்டுவரும் செவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 618,091 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 1,068,396 உடன் ஒப்பிடும்போது மீளாய்வாண்டிற்கான நிதிப்பெறுபேறு இலாபம் ரூபா 450,305 இனால் குறைத்து காட்டப்பட்டிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	04 கமநல சேவைகள் நிறைவேற்றுக்குழுக்களுக்கு விவசாய நிலங்களை மின்னியல் காணிப்பதிவேடுகளில் (Digital PLR) தரவேற்றம் செய்யும் நடவடிக்கைகள் நாளதுவரை இற்றைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	தரவேற்றம் செய்வதற்கான நடவடிக்கை தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது.	துரித நிகழ்ச்சித்திட்டத்தினூடாக திட்டமிட்டவாறு காணிப்பதிவேடுகள் நாளது வரையாக்கப்படல் வேண்டும்.
(ஆ)	வேலணை கமநல சேவைகள் நிலையத்தின் நான்கு சில்லு உழவு இயந்திர வாடகை வருமதி ரூபா 451,331 ஆனது 2 தொடக்கம் 14 வருடங்கள் வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.	இனிவரும் காலங்களில் சீராக்கம் செய்யப்படும்.	உரிய நேரத்தில் வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் கடன் அடிப்படையிலான வருமானத்தின் மேல் முறையான உள்ளகக் கட்டுப்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இவற்றினை மேற்கொள்ளாத உத்தியோகத்தர் மீது நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(இ)	அம்பன் கமநல சேவைகள் நிலையத்தில் களவாடப்பட்டிருந்த ரூபா 86,063 பெறுமதியான நான்கு சில்லு உழவியந்திரம் தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பதிவழிப்பு செய்வது தொடர்பான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	நட்டத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர் அடையாளம் காணப்பட்டு நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கபடல் வேண்டும்.
(ஈ)	பொருளாதரா அபிவிருத்தி அமைச்சினால் 2011 ஆம் ஆண்டு வழங்கப்பட்டிருந்த 108 நான்கு சில்லு உழவு இயந்திரங்களின் உரிமையினை மாற்றம் செய்வதற்கு கடந்த 13 வருடங்களுக்கு மேலாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	96 நான்கு சில்லு உழவு இயந்திரங்களின் உரிமையினை மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	நான்கு சில்லு உழவு இயந்திரங்களின் உரிமையினை மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.2 செயற்பாட்டுச் செயற்றிறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	நல்லூர் கமக்கார அமைப்பினது விவசாயிகளின் பிள்ளைகளின் ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோருக்கு வெகுமதிகளை வழங்குவதற்காக நிலையான வைப்பு வட்டி மூலம் சேகரிக்கப்பட்டிருந்த கூட்டுமொத்தம் ரூபா 7,035,192 ஆறு வருடங்களாக குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாது நிலையான வைப்புக் கணக்கில் வைப்பிலிடப்பட்டிருந்தது.	உரிய பெறுநர்களுக்கு பணத்தினை வழங்குவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.	முறையான திட்டத்தை பயன்படுத்தி முறையான அனுமதியின் கீழ் குறித்த நோக்கத்திற்காக நிதியம் பயன்படுத்தப்பட வேண்டும்.
(ஆ)	காரைநகர் கமநல சேவைகள் நிலையத்தினால் விவசாயிகளிற்கு அடையாள அட்டை வழங்குவதற்காக விவசாயிகளிடமிருந்து அறவிடப்பட்டிருந்த ரூபா 97,750 தொடர்பில் கடந்த இரண்டு ஆண்டுகளிற்கும் மேலாக அடையாள அட்டை வழங்குவதற்கோ அல்லது பணத்தினை மீளச் செலுத்துவதற்கோ எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	திணைக்கள அறிவுறுத்தலுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும்.	கமநல அபிவிருத்தி திணைக்களத்தில் உரிய அறிவுரை பெறப்படுவதுடன் நிதியானது குறித்த நோக்கத்தில் பயன்படுத்தப்படல் வேண்டும்.
(இ)	கீரிமலை கமநல சேவைகள் நிலையத்தினால் 03 உழவு இயந்திரங்கள் ஒப்பந்தம் எதுவுமின்றி கமக்காரர் அமைப்பிற்கு வழங்கப்பட்டிருந்தது.	ஒப்பந்தம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்	கமநல சேவைகள் நிலையங்கள் முறையான ஒப்பந்தத்தத்தினை மேற்கொள்வதுடன் இவற்றில் இருந்து பெறும் வருமானத்தினை உறுதிப்படுத்துவதுடன் இவற்றினை மேற்கொள்ள தவறிய தரப்பினர் மீது நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

3.3 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	11 கமநல சேவைகள் நிறைவேற்றுக்குழுக்களில் காணப்படும் நான்கு சில்லு உழவியந்திரங்களில் 66 எண்ணிக்கையான உழவியந்திரங்கள், 05 உழவு இயந்திரப்பெட்டிகள் 01 வருடங்கள் தொடக்கம் 10 வருடங்கள் வரை பழுதடைந்து காணப்படுவதுடன் திருத்தம் செய்து உபயோகிப்பதற்கு அல்லது அகற்றுவதற்கு ஆக்கபூர்வமான	குறித்த உழவு இயந்திரங்கள் மற்றும் உழவு இயந்திரப் பெட்டிகளை திருத்தம் செய்து பாவனைக்குட்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அதனை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.	உழவியந்திரங்களை திருத்த மற்றும் பயன்படுத்த அல்லது அகற்ற உரிய நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

	நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.		
(ஆ)	06 நிறைவேற்றுக்குழுக்களிற்கு 2019 ஆம் ஆண்டில் கமநல அபிவிருத்தி ஆணையாளரால் வழங்கப்பட்ட ரூபா 1,376,132 பெறுமதியான 06 மண் பரிசோதனைக்கருவிகள் (Soil Testing Instrument) தொடர்பாக ரூபா 45,000 செலவினம் மேற்கொள்ளப்பட்டு பயிற்சி வகுப்பு நடாத்தப்பட்டிருந்தபோதிலும் குறித்த கருவி நாளதுவரை பயன்படுத்தப்படாமல் இருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தது.	இக் கருவிகளை பயன்படுத்தி மண்ணின் PH, EC ஆகியவற்றை மட்டுமே அறியமுடியும் ஆனால் மண்ணின் பசளை அளவை அளவிட முடியாது இருப்பதனாலும் இக் கருவிக்குரிய இரசாயனங்களை பெற்றுக்கொள்ள முடியாது உள்ளதாலும் இது நாளதுவரை இக் கருவியானது பயன்படுத்த விவசாயிகளால் கோரிக்கை விடப்படவில்லை.	மண் பரிசோதனை கருவிகள் உரிய நோக்கத்திற்கு பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

4. கமநல வங்கிகள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
2009 – 2024 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருந்த கடன்களில் 207 விவசாயிகளிடமிருந்து கடன் நிலுவை ரூபா 12,785,698 அறவீடு செய்ய 13 நிறைவேற்றுக்குழுக்களினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	நிலுவைத்தொகை அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	கடன்களை வழங்குவது தொடர்பிலும் உரிய நேரத்தில் அறவிடாமை தொடர்பிலும் உரிய விசாரணை மேற்கொள்ளப்படுஉரிய தரப்பினரிற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதுடன் ஒப்பந்தத்தின் பிரகாரம் விவசாயிகளிடமிருந்து உரிய நேரத்தில் கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	15 நிறைவேற்றுக்குழுக்களின் இருப்புக்கள் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகள்	15 நிறைவேற்றுக்குழுக்களின் இருப்புக்கள் தொடர்பான உள்ளகக் கட்டுபாட்டு	இருப்புக்கட்டுப்பாடுகள் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு விருத்தி

	உரிய முறையில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	முறமைகள் உரிய முறையில் மேற்கொள்ளுவதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளனர் இனி வரும் காலங்களில் இருப்புகளின் உள்ளக கட்டுப்பாடு உரிய முறையில் பேணப்படும்.	செய்யப்படல் வேண்டும்.
(ஆ)	06 நிறைவேற்றுக்குழுக்களினால் பேணப்படும் இரும்புப் பாதுகாப்பு பெட்டகமானது இரட்டை கட்டுப்பாட்டு பாதுகாப்பு (Dual Control) முறையில் பேணப்பட்டிருக்கவில்லை	இரட்டைக் கட்டுப்பாட்டு முறையில் பேணுவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	நிதிப்பிரமாணம் 317 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.